பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

12 10 2025 SUNDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. இயற்கை வேளாண்மைக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாடு முழுவதும் 10 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் குறைந்த செலவில் சமையல் எரிவாயுவை பயன்படுத்தி வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தின் ஆறு மாவட்டங்களில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் இன்று நடைபெற்றது.

4. நீலகிரி, கோவை உட்பட ஒன்பது மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆசிய Triathlon பாரா சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஆஷிஷ்குமார் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

-- இனி விரிவான செய்திகள் ----

<<<<<>>>>>>

இயற்கை வேளாண்மைக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் விவசாயிகளுடன் கலந்துரையாடுகையில அவர் இவ்வாறு கூறினார்.

இயற்கை வேளாண்மையினால் ஏற்படும் பலன்கள் குறித்தும் பிரதமர் எடுத்துரைத்தார்.

<<<<<>>>>>>

பெட்ரோலியப் பொருட்களை பயன்படுத்துவதில் உலகின் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நாடு முழுவதும் 10 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் குறைந்த செலவில் சமையல் எரிவாயுவை பயன்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

பெட்ரோல் மற்றும் டீசல் வாங்குவதற்காக நாள்தோறும் 6 கோடியே 70 லட்சம் பேர் பெட்ரோல் நிலையங்களுக்கு செல்வதாகவும் அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழகத்தின் ஆறு மாவட்டங்களில் போலியோ பரவும் அபாயம் உள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் திருநீர்மலையில் சிறப்பு போலியோ சொட்டு மருந்து முகாமை இன்று தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

<<<<<>>>>>>

தீபாவளி பண்டிகையையொட்டி கூடுதல் கட்டணங்களை வசூலிக்கும் ஆம்னி பேருந்துகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் எச்சரித்துள்ளார்.

இன்று அரியலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்ட நெரிசலை தவிர்ப்பதற்காக தனியார் பேருந்துகளை ஒப்பந்த அடிப்படையில் இயக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதற்காக அனைத்து கோட்டங்களிலும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டடிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>>

பிஜேபி உடனான கூட்டணி வலுவாக உள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர்திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இன்று மேட்டூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக கூட்டணியில்தான் விரிசல் ஏற்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள் கூடுதல் இடம் வேண்டும் என்றும், ஆட்சியில் பங்கு வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தங்கள் கூட்டணி சுதந்திரமாக செயல்பட்டு வருவதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்டம் – ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படாததே இதற்கு காரணம் என்றார்.

கரூர் உயிரிழப்பு சம்பவத்திற்கு திமுக அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதாகவும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

சிறுநீரக திருட்டு சம்பவத்தில் யார் ஈடுபட்டிருந்தாலும் சட்டத்தின்படி அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு சண்முகம் கூறியுள்ளார்.

இன்று நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஏழை தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் கூடுதல் தொகுதிகளை தாங்கள் கேட்டு பெற உள்ளதாகவும் திரு சண்முகம் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நீலகிரி, கோவை உட்பட ஒன்பது மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி மாவட்டத்தில் 21 புதிய சொகுசு தாழ்தள பேருந்துகளின் சேவையை மாநில அமைச்சர் திரு மனோ தங்கராஜ் இன்று நாகர்கோவிலில் தொடங்கிவைத்தார்.

----------------------

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் ராஜகோபுரம் முன்பாக புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்தை மாநில அமைச்சர் திரு எ வ வேலு இன்று திறந்துவைத்தார்.

----------------------

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் காவல்துறை மற்றும் தீயணைப்புத்துறையினர் பட்டாசு கடை உரிமையாளர்களுடன் விபத்தில்லா தீபாவளி குறித்த விழிப்புணர்வு கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

----------------------

நாமக்கல் மாவட்டத்தில் உரிமம் பெறாமல் பட்டாசு கடை வைத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை எச்சரித்துள்ளது.

----------------------

தேனி மாவடடம் சுருளி அருவியில் யானைகள் நடமாட்டம் தென்பட்டதையடுத்து பாதுகாப்பு கருதி சுற்றுலாப் பயணிகளுக்கு வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய Triathlon பாரா சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஆஷிஷ்குமார் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஜப்பானின் Chiba-வில் நடைபெற்ற இப்போட்டியின், ஆடவர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------

ஜப்பான் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் 11-7, 11-1, 11-5 என்ற செட் கணக்கில், எகிப்தின் Rana Ismail-ஐ வென்றார்.

-----------

ஜோஹர் கோப்பை ஜுனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று 4-2 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தை வென்றது.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியாவின் Roshan Kujur, Arshdeep Singh, Araijeet Singh, Sunil ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

-----------

துருக்கி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஹரிஹரன் – Treesa Jolly இணை பட்டம் வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 21-14, 18-21, 21-11 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் Nawaf – Nahya Muhyifa இணையை வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் அர்ஜுன் – ஹரிஹரன் இணையும், 21-13, 21-6 என்ற செட் கணக்கில், ஜப்பானின் Shuyna Ota – Yuto Noda இணையை வென்று பட்டத்தை கைப்பற்றியது.

--------------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று ஃபாலாஆனை பெற்று இரண்டாவது இன்னிங்சை ஆடிவரும் வெஸ்ட் இன்டீஸ் ஆட்டநேர இறுதியில் 2 விக்கெட் இழப்பிற்கு 173 ரன் எடுத்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், John Campbell 87 ரன்னுடனும், Shai Hope 66 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, 4 விக்கெட் இழப்பிற்கு 140 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிய வெஸ்ட் இன்டீஸ் 248 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

குல்தீப் யாதவ் அபாரமாக பந்துவீசி ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தியா முதல் இன்னிங்சில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 518 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

**<<<<<>>>>>>**